உ

சொக்கநாத ஸ்ரீ வல்லபை விநாயகத் தோத்திரப் பாமாலை.



சுக்கில௵ புரட்டாசி௴ 10௳

குமரன் பிரஸ், காஞ்சீபுரம்.

உ

சொக்கநாத வல்லபை சமேத விநாயகன் துணை.



சொக்கநாத ஸ்ரீ வல்லபை வினாயகத்
தோத்திரப் பாமாலை.

இஃது

செய்யாறு தாலூக்கா சின்ன செங்காடு கிராம மேலண்டை
வீதியின் கோடியில் ஸ்ரீ வல்லபை வினாயகப் பெருமான்
திருக்கோயிலில் திருப்பணி கைங்கர்யஞ் செய்து முடித்து
அத்திருக்கோயிலில் தன் திருப்பெயருடன் ஸ்ரீ சொக்கநாத
வல்லபை விநாயகப் பெருமானையும் எழுந்தருளச் செய்து
கும்பாபிஷேகமும் பூர்த்திசெய்து நாடோறும் விநாயகப்
பெருமானைக் காதலித்து தவமேற்கொள்ளும்
சொக்கலிங்கன் இயற்றியது

இதன் விலை] [பை 6.

பாயிரம்.

சைவ சாம்ராஜ்ய சாதுக்கள் சன்னிதானத்தின் பரிச வேதியே போதிய கியானத்தைத் தரும் என்ற பிரமாணத்தை நோக்கின் திண்ணனூர் மண்ணுலகின் மக்கட் பெறும் பேற்றிற்குக் கரியன்றோ. அவ்வாறே சிவபுண்யமான நவபுண்யனாய் கோவிலூர் மடாலய ஸ்ரீ பரிபூரணானந்த ஸ்வாமிகள் அந்தரங்க பாரங்கதத் தொண்டராய் பணியுனூற்றிய சொக்கலிங்கன் பின்னரும் ஆராத காதலனாய் தவராஜ யோகியாகிய அப்பரிபூரணானந்த ஸ்வாமிகள் சிவராஜயோகமான நிர்விகற்ப சமாதியின் ஸ்பரிச தரிசன பலப்ராப்தியால் மூலாதார முதல்வனான மூஷிகவாகனனின் திருக்கோயில் திருப்பணிசெய்து தனது பழியுடல் பாவனமாம்பொருட்டு தன்னுமத்துடன் சொக்கநாத வல்லபை சமேத விநாயகப் பெருமானை எழுந்தருளச் செய்த காதல் விஞ்சி அப்பெருமானுக்குச் சாற்றிவரும் பூமாலையோடு இப் பாமாலையும் சாற்றிய சாந்தமூர்த்தியாகிய சொக்கலிங்கன் சற்குருநாதன் திருவருளால் பிறவா நெறியைத் தரும் சொக்கநாத வல்லபை விநாயகப் பெருமானருள்சேர்ந்து இனிது வாழ்க. வாழ்க.

உ

சாற்றுக் கவிகள்.

ம-ா-ா-ஸ்ரீ திருத்துருத்தி மடாலய கரபாத்திர ஸ்வாமிகள்
அந்தரங்க முனுகப்பட்டு மடாலய நீலமேக ஸ்வாமிகள்
தொண்டர்களில் ஒருவராகிய

துறவாளர் அருளானந்தர்

இயற்றியது

கலி விருத்தம்.

தக்க வாசகச் சைவநற் றொண்டனுஞ்
சொக்க லிங்கச் சுகுணன் செங்காடுளான்
தக்க வல்லபைத் தந்திக்கா மந்திரம்
ஒக்கச் செய்திப்பாத் தோத்திர முதவினன்.

செய்யார் தாலூக்கா கோவிலூர் உபாத்யாயர்

ஸ்ரீ கம்பராமாயண ப்ரசங்க பாரங்கத

K. விஜயராகவ பிள்ளையவர்கள்

இயற்றியது

விருத்தப்பா.

தண்டமிழ்ச் சலதித்தாண்டத் தவக்கல ஞானமூலத்
துண்டவெண் பிறைமாக்கோயிற் புதுக்கியச் சொக்கலிங்கன்
மண்டுவல் லவைநாதன் பாமாலை மானிலத்தோர்க்காங்கற்
கண்டென விருந்துசெய்தான் கரையிலாக் காதலாலே.

உ

ஸ்ரீ சோக்கநாத வல்லபை விநாயகப் பெருமான்

தோத்திரப் பாமாலை.

வெண்பா.

சீரோங்குஞ் சைவநிலைத் தெளிவுதருந் திருக்கூட்டப்
பேரோங்கும் மெய்ஞ்ஞானப் பிறங்குதவத்—தாரோங்குஞ்
சொக்க வல்லபைப்பங்கன் தோத்திரப்பா மாலைசொல
அக்கரமைங் தோன்ற லரண்.

சற்குரு வணக்கம்.

விருத்தம்.

ஆரண னந்தமென்னு மருள்வடி வானமூல
வாரண வதனபோக வல்லபேசன் பாப்பாட
காரண னந்தயோகக் கைவல்யசித்தன் கோவைப்
பூரண னந்தஞானப் புனிதன்றாட் பூவேகாப்பாம்.

அவையடக்கம்.

விருத்தம்.

தமிழ்மண நுகரேன்யோகத் தவநெறி யணுகேன்சான்றோர்
அமிழ்தெனு முபதேசத்தி லன்பினைச் செலுத்தேனீர்மேற்
குமிழியா மெய்யைப்பொய்யாய்க் குறிக்கிலேன்சொக்கலிங்கன்
உமிழ்மொழித் தோத்திரப்பா வுயர்வுற வருளுவீரே.

நூல்.

எழுசீர்க்கழி நெடில் ஆசிரிய விருத்தம்.

கரும்புசர்க் கரைபயறு எள்ளுண்டை பணியாரம்
கச்சாய மவல் பாகுடன்
கற்கண்டு தோசையும் வடைகடலை பொரியுடன்
கதலிப் பலா மாக்கனி
விரும்பு மிளநீ ரமுது பச்சரிசி நெய்யுடன்
வியன்மதுர பேணி லட்டு
வில்வமொடு கொன்றையும் வெள்ளறுகு தும்பை
விய னந்தியா வட்டமும் [யும்

அரும்புதவு மல்லிகை முல்லையிரு வாக்ஷியுடன்
அம்போ ருகந் தாரமும்
அரிச் சந்தனங் கற்பகம் பாரிஜாதமொடு
ஆயசீர் சண்பக மருச்

சுரும்பொலி செய்க்காவு சூழ்ச்செங்காடு மேற்கோடி
தூயதிரு வீதி யமருஞ்
சொக்க நாதானந்த வல்லபை விநயகச்
சுகமூ லாதா ருயகா. (1)

விரும்புமடி யேன்மனதிற் றுயாங்க ளணுகாத
விதமெனக் கருளையனே
வெண்மத விநயகா தாயகா கோடியாம்
வீடுதந் தாட்கொள் விமலா

திருமாலின் மருகனே உமையாளின் செல்வனே
தேவர்கள் தொழுந் தீர்த்தனே
திருமூர்த்தி கட்குமே ஆதார மூலனே
தினகரத் தேஜோன் மயா

கருமாயந் தீரவுன் கழலால யந்தனில்
கனிந்துருகி காரண மொன்றுய்

காதலது விஞ்சிநின் பாதமலர் எப்போதுங்
கண்டுய்யு நாளு முளதோ
சுரராஜர் துதிபாடுஞ் செங்காடு மேற்கோடி
தூயதிரு வீதி யமருஞ்
சொக்க நாதானந்த வல்லபை விநாயகச்
சுகமூ லாதர நாயகா (2)

ஜகமாய்கை தன்னிலே சிக்காதுன் அடியாரின்
சமரச சன்மார்க்க நிலையில்
தலையிட்டு கும்பிட்டு தாள்சேர்ந்து பத்தியெனுஞ்
சைதன்ய நிலை தொட்டுமே

தகுமான துறவுமேற் கொண்டு யேகாந்தமாய்
தனுகரண புவன போகத்
தடையாதி நீங்கியே நிர்விகற் பானந்த
சமாதிநன் னிலை கூடியே

இகபர மிரண்டறக் கலந்து கைவல்யனாய்
ஏகாக்ர சித்தனாகி
என்னாளு முன்னும மந்த்ர ஜீவனாக
இருந்திடுங் கால முளதோ

சுகபோக வாழ்வோங்கும் செங்காடு மேற்கோடி
தூயதிரு வீதி யமரும்
சொக்க நாதானந்த வல்லபை விநாயகச்
சுகமூ லாதா நாயகா (3)

வருதிகாண் வருதியெமன் சினமீரி பகடேரி
வளர்பாச மொடு தண்டனாய்
வாக்கிற்கு மனதிற்கு மொட்டாத கோலமொடு
வந்துபிடர் பற்றி யெற்ற

கருதிநல் லடியார்கள் காலன்வர வொட்டாத
காரணமிஃ தென் றெண்ணி
கனல்வாதை யோடுமும் மலவாதைக் கஞ்சியே
கந்த மூலம் நுகர்ந்து

பருதியொளி யினுமறிய நினதுபர வொளியான
பாக்கியம் பற்றி னாப்
பாவன மிகுந்தநற் பார்கவப் பூதியில்
படிந்துய்யு நாளு முளதோ

சுருதிமுடி விடநடஞ்செய் செங்காடு மேற்கோடி
தூயதிரு வீதி யமரும்

சொக்க நாதானந்த வல்லபை விநயகச்
சுகமூலா தா நாயகா (4)

பவக்கடற் ருண்டியுன் பதநிழலில் வந்துகண்
பனிப்ப ரோமம் பொடிப்பப்
பரவச முடனுகக் குரல்தழு தழுத்துமே
பாடிநாத் தழும் பெழும்பத்
தவக்கலன தாகுமுன் னடியார்கள் பணிமுற்ற
தாகசோ கத்தி னோடு
தானெனு மகங்கார மமகார மற்றுமே
சமாதியா நிட்டை கூடி
உவக்குமன முறுதியா யுட்புறமு மொன்றதா
யுள்ளநா ளழியா ததாய்
ஓங்கார ரீங்கார ஸ்ரீங்கார பிரணவ
முதவிசெய் நாளு முளதோ
சுவைக்கும் வாசகமதுர செங்காடு மேற்கோடி
தூயதிரு வீதி யமரும்
சொக்க நாதானந்த வல்லபை விநயகச்
சுகமூலா தா நாயகா (5)

வேறு.

பொன்னின்வார் முகத்தானைப் புனிதரிட வகத்தானைப்
புலவர் போற்றுஞ்
சொன்னலஞ்சேர்த் தாரானைப் பேரானை சீரானைத்
துதிக்கை யானைச்
சென்னியிலா ருடையானின் திருமகனை கரிமுகனைச்
செங்க ணானைப்
பன்னுமொரு நாளெல்லாம் பாவனநாட் பாவாநாட்
பழிநா டானே. (1)

தந்திமுக நீற்றனை தமிழ்மண நால்வாயானைத்
தக்கோர் பேணுஞ்
சந்திஜெப மறையானை இறையானை யீரிரண்டோர்த்
தருகை யானை
மந்திரஞ்சே ருடலானை மலையெனவே வருவானை
மணத்தோ ளானைச்
சிந்தனைசெய் திடுமடியார்த் திருவடியா மோலியுமென்
சிரங்க விப்பாம். (2)

அங்குசம் பூண்கையானை ஆகமநூற் றுரையானை
அருட் பெய்வானை

பங்குருவல் லபையானைப் பார்க்கவனை ஆற்குங்கழல்
பாதத் தானை
திங்களுருங் கோட்டானை வீட்டானை செல்வதிருச்
செங்காட் டானை
மங்களஞ்சேர் மதயானை மலரடிக்கே மலர்சூட்டி
மகிழ்வாம் நாளே. (3)

ஓம்என்ற முழுமூலா தாரா காப்பு
உமையாளின் மணியுதர மகனே காப்பு
பாம்பணியும் பலிக்கையோன் பாலா காப்பு
பார்க்கவனே கார்முகநற் பரனே காப்பு
பூம்பொழிற்சூ ழருணவனப் புண்யா காப்பு
புலவரிட சொற்றமிழின் பொருளே காப்பு
ஆம்புவியி லுனதருளே யாகுங் காப்பு
ஐங்கரனே ஹரஹரநற் சிவனே காப்பு, (4)

உம்பர்கள் தொழுங் கருமலையே போற்றி
ஓவிய மெழுதறி உருவே போற்றி

அம்பிகை மடிவா ழமலா போற்றி
ஐங்கர நால்வாய் அரசே போற்றி
சம்புவின் மகனே சதுரா போற்றி
சைவநல் வடிவே தமியேம் போற்றி
நம்பியே வந்தோம் நாகா போற்றி
நலமெலாந் தந்தருள் நலனே போற்றி. (5)

திருவாகித் தெளிவாகித் தெவிட்டாத தேனுகி
சிவமு மாகிக்
கருவாதை யில்லாத கடலாகி மனமாதி
கருதற் காகா
உருவாகி யுயிராகி யுமையுதர மகனுன
ஒருவன் ருள்மேல்
மருவாகுஞ் சொன்மாலை முப்போதுந் தப்பாது
மகிழ்ந் தோதுவாம். (1)

வல்லபை நாதன் ருேட்கு வளர்மலர்
மாலை சாற்றி
தொல்லைமா வினைக ளோந்துத் துரிசிலா
மனத்த ஞக
எல்லை யில்லாத வின்ப மெய்தியித்
தோத்தி ரப்பாச்
சொல்ல வானந்த ஞானச் சொரூபமே
துணைய தாமே. (2)

முடிவுரை.

அகவற்பா.

சீர்தரு மூலச் செழுஞ்சுடர் விளக்கே
கார்நிற மேனிக் கற்பகக் களிறே
அல்ல லென்பதனை அறுத்திடுஞ் சொக்க
வல்லபை பாகம் வைத்த முன்னோனே.
பொங்கர வணிந்த புண்ணிய ஞானச்
சங்கர னருளிய சற்குணக் குன்றே
தந்தையும் நீயே தாயும் நீயே
கந்தன்முன் வந்தக் கற்பகக் களிறே.
நாதமும் நீயே நான்மறை நீயே
போதமும் நீயே புரிதவம் நீயே
ஹரியும் நீயே அயனும் நீயே
திரிபுர தகனச் சிவனும் நீயே,
ஆரண முடிவில் அமருமெய்ப் பொருளே
நாரணன் மருகா நால்வா யுடையா
மும்மதக் குன்றே மூஷிகா னந்தச்
செம்மலே சிவமே திகழ்வி னாயகனே.

வள்ளிமுன் வந்த வாரண மலையே
தெள்ளருங் கல்வித் தெவிட்டா வமுதே
கடமதப் பெருக்கே கைமலைக் கோவே
நடமலற் சரணம் நாகமே நல்காய்

விண்ணினும் மண்ணினில் வியங்கும் பூதத்தில்
எண்ணிலாப் பொருளில் இலகும்போதகமே
திருச்செங் காடாள் செல்வமே சரணம்
உருக்கோ வினனும் உயர்பதந் தாவே.

அன்பெனும் பூவால் அர்ச்சித் தேனல்
இன்புமேற் கொண்டு இறங்கிய மனனுய்
நாமாலை யெனும் நறவொழுக் கெனவென்
பாமாலை யினை பரிவுடன் புனைந்து.

தடுத்தாட் கொள்ளத்தாடலைப் பூண்டேன்
எடுத்தநூற் றுமையும் இனிதா யோங்க
வரந்தா வேணும் வானோர் வாழ்வே
நிறந்தா மாக நிலவுல கதிலே.

முற்றும்.

இங்ஙனம்.

சின்ன செங்காடு சொக்கலிங்கன்.

திருக்குறள்

மூலமும், பொழிப்புரையும்.

பதம் பிரித்த மூலம். தெளிய எழுதிய கருத்துரை. நல்ல கிளேஸ் காகிதம். சுத்தமான பதிப்பு. சுமார் 300 பக்கங்களுள்ளது. பல அறிஞர்களும், பெரியோர்களும் நன்றென மதித்தது. இதுவரையில் யாரும் வெளியிட்டிராத மாதிரி. ஒரு மாத காலத்தில் 4000 பிரதிகளுக்கு முன்பணம் அனுப்பி நல் வரவேற்கப் பெற்றது. பல பெருந் திருவாளர்களால் நூற்றுக் கணக்கான பிரதிகள் ஏழை மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்பெற்றது. எல்லாரும் வாங்கி பயனடைய வேண்டி குறைந்த விலைக்கு வெளியிடப் பெற்றதென பல பெரியோர்கள் வாழ்த்துரை வழங்கும் பேறு பெற்றுள்ளது. 5000 பிரதிகளே அச்சிட்டது. சொற்ப பிரதிகளே கைவசமுள்ளன.

தமிழ் நாட்டில் இம்மாதிரி சுத்தப் பதிப்பு உரையுடன் கூடிய திருக்குறளை 0—8—0க்கு இதுவரையில் ஒருவரும் கொடுத்ததில்லை; இனி கொடுக்கப்போவதுமில்லை. முன்னதாக ஆர்டர் அனுப்புவோருக்கே பிரதிகள் கிடைக்கும்.

பிரதி 1-க்கு 0—8—0 தபால் செலவு வேறு.

தமிழ் நூற்பதிப்புக் கழகம்,

48-நெ. செல்லுக்காரத் தெரு, காஞ்சீபுரம்